உற்பத்தியாளரின் விலைகள் (ஆகக்கூடிய அளவில்) கூட்டப்பட்ட நிலையிலும் 1973மேயில் பைந்து ஒன்றுக்கு 20 சதத்தால் அல்லது முந்திய விலை மட்டங்களை விட 44 சதவீதத்தாலும், 1974 செத்தெம்பரில் 30 சதத்தினுலும் அதிகரிக்கப்பட்டன. இது 1972 மட்டத்திலும் பார்க்க 111 சதவீதமாகும். கூடிய கால்நடை உணவு இருப்புக்களின் உயர்ந்து செல்லும் விலைகளினுல் பாற்பண்ணைக் கைத்தொழிலேற்பட்ட சுருக்கத்தின் காரணமாக, பாற்சபையினுல் கொள்வனவு செய்யப்பட்ட பாலின் அளவு 1972இல் இருந்ததைவிட 1.5 சதவீதத்தாலும், 1973இல் இருந்ததைவிட 3.0 சதவீதத்தாலும் குறைவடைந்தது. மேலும் குறைந்த வருவாய் பெறுபவர்கள் அதிகரித்த விலையில் பாலைச் கொள்வனவு செய்யும் இடர்ப்பாட்டு நிலைக்கு உயர்வுற்ற உற்பத்தியாளர் விலைகள் காரணமாயிருந்தன. தூய்மையாக்கப்பட்ட பாலைப் பொறுத்தவரை 1972 மட்டத்தை விட 100 சதவீதத்தால் அதிகரித்து விளங்கியது. பாற்சபையினுல் கொள்வனவு செய்யப்படும் பாலின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, சபையினுல் வழங்கப்படும் பாலின் கிடைக்கக் கூடிய அளவினைக் குறைப்பதற்கும் மக்கள் இறக்குமதியில் தங்கியிருக்கும் நிலையினைத் தொடரச் செய்வதற்கும் வழிவகுத்தது. விலையதிகரிப்பினை ஆகக்குறைந்த மட்டத்தில் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கொள்கையடிப்படையில் பார்க்கையில் (வெ. நா. உ. சா கொடுக்கப்படும்)

இறக்குமதிகளில் ஏற்பட்ட விலையதிகரிப்பானது பாற்சபையில், 1973 இல் ஏற்பட்ட ரூ. 409.0 இலட்சம் இழப்புடன் ஒப்பிடுகையில் 1974இல் ரூ. 707.4 இலட்சம் இழப்புக்குக் காரணமாயிற்று.

(ஆ) எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம்:

கால்நடைத் தீனியை இந்நாட்டுக்கு பெருமளவு வழங்கும் இக்கூட்டுத்தாபனம் 1974இல் 43,058 தொன்களை மட்டுமே உற்பத்தி செய்தது. இது இப்பொருள்களின் 1973, 1972 ஆம் ஆண்டு வெளியீடுகளை விட முறையே 18.3, 35.5 சதவீதங்களால் குறைவடைந்திருந்தது. கால்நடைத் தீனியைப் பொறுத்தளவில் அதன் திறனில் 61.5 சதவீதமே 1974இல் பயன்படுத்தப்பட்டது. உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சியானது பாற்பண்ணை, பன்றி, கோழி பண்ணைக் கைத்தொழில்களில் ஒரு பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் உற்பத்தி 1973இல் 1080 தொன்களுடன் ஒப்புநோக்குகையில் 216 தொன்களாகும். பன்னாட்டு விலைப்போக்குகளின் காரணமாக ஏற்றுமதிப் பெறுமதிகள் 14.2 சதவீதத்தாலும் 78.3 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்த போதிலும் கொழுப்பு அமிலத்தினதும், கிளிசரினினதும் ஏற்றுமதி அளவுகள் 1973ம் ஆண்டின் மட்டத்தை விட முறையே 33.7 சதவீதத்தாலும், 74.5 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

1974 ஒகத்து 1இல் கூட்டுத்தாபனம் தனது உற்பத்திப் பொருட்களின் விற்பனை விலைகளை கால்நடைத் தீனிப் பொருட்களுக்கும், கோழித்தீனுக்கும் ஏறக்குறைய, முறையே 41 சதவீதத்தாலும், 26 சதவீதத்தாலும் அதிகரித்தது. இதற்கு முன்பு இப்பொருள்களின் மீதான விலையதிகரிப்புக்கள் 1973 பெப்புருவரி 1இல் முறையே 42 சதவீதமாகவும் 17 சதவீதமாகவும் இருந்தன. இறக்குமதி செய்யப்பட்டதும், உள்நாட்டு உற்பத்திகளினதும் உள்ளீடுகளின் (முக்கியமாகத் தெங்குக் கைத்தொழிற் பொருட்கள்) உயர்ந்து செல்லும் செலவானது விற்பனை விலைகளில் ஏற்பட்ட பெருமளவிலான அதிகரித்த நிலையிலும் கூட்டுத்தாபனத்தினால் 1973இல் பதிவு செய்யப்பட்ட 4 இலட்சம் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 1974இல் 148 இலட்சங் கொண்ட மதிப்பிடப்பட்ட நட்டத்துக்குப் பொறுப்பாயிருந்தது.

(இ) அரசாங்கத்துக்குச் சொந்தமாக்கப்பட்ட பிரித்தானிய – இலங்கைக் கூட்டுத்தாபன முயற்சிகள்:

கூட்டுநிலையத்தினாலும் அதன் இரு கிளை நிறுவனங்களான பிரித்தானிய – இலங்கை ஆலைக்கூட்டு நிலையம், பிரித்தானிய - இலங்கை பிரித்தெடுக்கும் கூட்டு நிலையம் ஆகியவற்றினாலும் வழங்கப்பட்ட தகவல்களின்படி 1974ஆம் ஆண்டில் 17.459 தொன்கள் தேங்காய் எண்ணெயும், 489 தொன்கள் முனைப் பழிக்கப்பட்ட எண்ணெயும், 404 தொன்கள் மணம் அகற்றப்பட்ட எண்ணெயும், 5534 தொன்கள் சவர்க்காரமும், 13,253 தொன்கள் கால்நடைத் தீனியும் உற்பத்தி செய்யப்பட்டன. 1974இல் 1,126 ஊழியர்கள் இருந்தனர். 1974ம் ஆண்டுகளுக்கான நிதித் தரவுகள் கிடைக்கத் தக்கனவாயில்லை.

(ஈ) இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம்.

1974இல் உண்மை அடிப்படையில் இக்கூட்டுத்தாபனமானது உற்பத்தியைப் பொறுத்தளவில் ஒரு குறிப்பிடத்தக்க விதிவிலக்கினை கைத்தொழில் கூட்டுத் தாபனத்துக்கு வழங்குகிறது. 1974 இல் சீனியின் உயர்ந்த வெளியீடானது (முன்னெப்பொழுதும் அடையப்படாதவாறு 56 சதவீத அதிகரிப்பு) 1972-73 இல் ஏற்படுத்தப்பட்ட புதிய பயிரிடல் பண்படுத்தல் பயிற்சிகளும், கரும்பி லிருந்து சீனிக்கு மாற்றப்படும் விகித உயர்வும், சிறந்த செயலாற்றம் நிலவிய தற்குக் காரணமாகலாம். பின்கூறப்பட்ட விடயம் அறுவடை, போக்குவரத்து, தொழிற்சாலைத் தொழிற்பாடுகள் ஆகியவற்றின் திறனால் நிர்ணயிக்கப்பட்டது. எனினும், நீர் பற்றாக்குறையின் காரணமாக 1974இல் திட்டமிடப்பட்ட நிலப்பரப்பில் ஒரு சிறிய பகுதியியே பயிரிடப்பட்டது. எனினும் 1975 இல் மொத்தமாக 20,000 தொன்கள் சீனியைப் பெற்றுக்கொள்வதை அரசாங்கம் எதிர்பார்த்த நிலையில் பன்னாட்டு விலைகளின் நிலைமை நெற்செய்கைக்குப் பதிலாக சீனிக்கே சாதகமாயிருந்த நிலையிலும் முன்பு கூறப்பட்ட காரணத் தினாலும் நெற்செய்கைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தினாலும் 1975இல் நெல்லின் மதிப்பிடப்பட்ட வெளியீடு 16,000 தொன்கள் மட்டுமே) 1974இல் உற்பத்திச்செயலாற்றம் நல்ல முறையில் அமைந்தபோதும் இக்கைத்தொழிலின் வளர்ச்சிக்கு இத்தகைய தடையேற்பட்டது வருந்தத்தக்க விடயமாகும். கரும்பிலிருந்து செய்யப்படும் வெல்லப்பாகின் உற்பத்தி முன்பு பதிவு செய்யப்பட்ட அதி உயர்ந்த எண்தொகையை விட 23 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் சாராய உற்பத்தியானது 1973இன் 1,269,000 கலன்களுக்கு மாறாக, 1974இல் 1,435,914 கலன்களாக இருந்தது. கூட்டுத் தாபனம் தனது உடவளவை கண்டசாரிப் பொறி நிலையத்தில் 286,315 இறுத்தல் வெல்லத்தையும் 128,004 கலன்கள் இன்கொழுநீரையும் உற்பத்தி செய்தது.

1972 வரையும் ஒரு தொன் சீனியின் கொள்வனவு, கப்பல் கூலி விலையே கூட்டுத்தாபனத்துக்குக் கொடுக்கப்பட்டன. 1973, சனவரியில் செலுத்தப்பட்ட விலைகள் தொன்னொன்றுக்கு ரூ. 1904 ஆகவும், 1974இல் தொன்னொன்றுக்கு ரூ. 3136 ஆகவும் அதிகரிக்கப்பட்டன. கொள்வனவு கப்பல் கூலி விலைகள் 1973இலும் 1974இலும் தொன்னொன்றுக்கு முறையே ரூ. 1752.16 ஆகவும், ரூ. 5485.75 ஆகவும விளங்கின.

1973இல் சீனியுற்பத்தியில் ஏற்பட்ட நட்டம் ரூ. 51 இலட்சமாக விளங்கிய போது, 1974இல் ரூ. 200 இலட்சம் இலாபமாகப் பெறப்படுமென எதிர் பார்க்கப்பட்டது. 1974இல் பழவெல்லம் இன்கொழுநீர் ஆகியவற்றின் உற்பத்தி, விற்பனை என்பவற்றிலான மதிப்பிடப்பட்ட இலாபம் ரூ 26 இலட்ச மாயிருக்கையில் மாவட்ட அபிவிருத்தி அதிகாரிகளுக்கான கரும்பு விதை வழங்கலானது கூட்டுத்தாபனத்துக்கு ரூ. 8 87 இலட்சங்கொண்ட செலவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டது. சாராய உற்பத்தியிலிருந்தும் விற்பனையி லிருந்தும் கிடைக்கும் இலாபம் 1973இல் ரூ. 73 இலட்சமாயிருந்ததற்கு எதிராக 1974இல் ரூ. 78 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. 1973இல் கூட்டுத் தாபனத்தின் மொத்த இலாபம் ரூ. 3.56 இலட்சமாயிருந்த வேளையில் 1974ம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட எண்தொகை ரூ. 283 இலட்சமாயிருந்தது.

(உ) அரச மாவரைத்தற் கூட்டுத்தாபனம் :

கோதுமை மாவின் வெளியீடு 28,5 சதவீதத்தால் 46,276 தொன்களாக வீழ்ச்சியடைந்தபோது ஆட்டா மாவின் வெளியீடு 394 சதவீதத்தால் 25,641 தொன்களாக உயர்ந்தது. கோதுமை மா உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து கோதுமைத் தவிட்டின் உற்பத்தியும் 65.4 சதவீதத் தால் வீழ்ச்சியடைந்தது. 1974இல் ரூ. 18.5 இலட்சங்கொண்ட (க. ஏ. பெ.) 3901 தொன் கோதுமைத் தவிடு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது 1973 எண் தொகைகளை விடக் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்ததாகும்.

1974இல் கூட்டுத்தாபனம், எதிர்பார்க்கப்பட்ட இலாபமான ரூ. 400 இலட்சத்தைப் பெற்றது. இதற்கு இரண்டு காரணிகளிருந்தன. கூட்டுத் தாபனத்தினுலும் தன்னுலும் இறக்குமதி செய்யப்பட்ட மாவின் கொள்வனவு கப்பற்கூலிகளுக்கீடான தொகையைக் கூட்டுத்தாபனத்துக்கு உணவு ஆணை யாளர் வழங்கினுர். சாக்குகளில் இறக்குமதி செய்யப்பட்ட மாவுக்கு ஒரு தொன்னுக்கு ஏறக்குறைய 75 டொலர் என்ற அடிப்படையில் உணவு ஆணையாளர் செலுத்த வேண்டுமென்பதற்கெதிராக பெட்டிகளிலடைக்கப்பட்ட சரக்கை இறக்குமதி செய்யப்பட்ட மொத்த மாவுக்கு ஒரு தொன்னுக்கு ஏறக்குறைய 24 டொலர் என்ற அடிப்படையில் செலுத்தும்படி வேண்டப் பட்டார். இரண்டாவதாக, அவுத்திரேலியா நாணய மதிப்பிறக்கம் (அவுத்தி ரேலிய நாணயத்தில், குறிக்கப்பட்ட விலைகள் உயர்த்தப்படாத நிலையில்) ரூ. 70 இலட்சங்கொண்ட மிகப் பெருமளவு இலாபத்தைப் பதிவுசெய்வதற்கு உதவியாயிருந்தது. 1974இல் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான மதிப் பிட்ட வருவாயானது 100 சதவீதமாகும். இச்செயலாற்றம் அதன் அடிப்படை வளமாற்றலைக் காட்டுகிறபோதிலும், நாடு இறக்குமதி செய்யும் பாலின் 10.5 சதவீதத்தையே உற்பத்திசெய்தது. அத்துடன் ஒரு ஆலையையே தொழிற்படும் நிலையில் வைத்திருக்கிறது.

(ஊ) தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் :

1974இல் உப்பின் வெளியீடு 6.5 சதவீதத்தால் 113,387 தொன்னுக வீழ்ச்சியடைந்தது. இந்த வருடத்தில் எவ்வித ஏற்றுமதிகளும் இருக்கவில்லை. 1974இல் வரிக்கு முந்திய இலாபமானது 22 இலட்சமாக இருந்தது. இவ் விலாபமானது பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 27.3 சதவீத வருவாயாகும். 1973இல் இலாபம் 48 இலட்சமாயிருந்தது.

(எ) இலங்கை புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் :

பீடிகளின் வெளியீடானது 5.8 சதவீதத்தால் 45.486 சாக்குகளாக உயர்ந் தது. 1973இல் இக்கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபம் 112 2 இலட்ச மாகும். 1974க்குரிய மதிப்பிடப்பட்ட இலாபம் ரூ. 120 இலட்சமாகும்.

(ஆ) புடவைகள், ஆடைகள், தோற்கைத்தொழில்கள்

(அ) தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் :

1974இல் இக்கூட்டுத்தாபனத்தின் முக்கிய உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியானது 1973இன் உற்பத்தி மட்டத்தைவிட ஒரு உயர்ச்சியைப் பிரதி பலித்தது. துணியுற்பத்தி 1973இன் மட்டத்தைவிட 15 சதவீதத்தாலும், 1972 இன் மட்டத்தைவிட 8 சதவீதத்தாலும் அதிகரித்தது. எனினும் பூகொடை ஆலையின் (1973 இல் செயல்படத் தொடங்கியது) உற்பத்தியை நீக்கின் துணியுற்பத்தி 1973ஆம் ஆண்டு மட்டத்தைவிட 11 சதவீதத்தால் அதிகரித்தது. நூலிழையின் உற்பத்தி 1973, 1972 மட்டங்களைவிட முறையே 5 சதவீதத்தாலும் 4 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது.

1973இன் 65 இலட்சத்துடனும், 1972இன் 179 இலட்சத்துடனும் ஒப் பிடுகையில் 1974இன் மதிப்பிடப்பட்ட மொத்த இலாபமானது ரூ. 181 இலட்ச மாயிருந்தது. பயன்படுத்தப்பட்ட பூகொடை ஆலை நீங்கலாக) மூலதனத்தி லிருந்து பெற்ற வருவாய் 1974இல் 5 8 சதவீதமாயிருந்தது

துல்கிரியா ஆலையில் நூலிழையினதும் அளவான தறிகளினதும் வெளியீடு 1973ஆம் ஆண்டை விட முறையே 3 சதவீதத்தாலும், 35 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்த போதிலும் மெருகூட்டப்பட்ட துணியுற்பத்தியிலும், (380 சத வீதம்) லோங் துணியுற்பத்தியிலும் (24 சதவீதம்) தரகு அடிப்படையிலான மெருகூட்டப்பட்ட துணியுற்பத்தியிலும் (257 சதவீதம்) கணிசமான வீழ்ச்சி யொன்று பதிவு செய்யப்பட்டது. தொழிலாளர் எண்ணிக்கை 13 சதவீதத்தால் உயர்ச்சியடைந்தது. பயன்படுத்தப்பட்ட இயலளவு நூற்றலிலும், நெசவிலும், மெருகூட்டலிலும் முறையே 44 சதவீதமாகவும், 35 சதவீதமாகவும், 45 சத வீதமாகவும் இருந்தது.

வியாங்கொடை ஆலையில் துணியுற்பத்தி 4 சதவீதத்தால் அதிகரித்தபோது, நூலிழையின் வெளியீடு 1973 மட்டத்தைவிட 10 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்தது. நூலிழையினதும் துணியினது இயலளவுப் பயன்பாடு முறையே 83 சதவீதமாகவும், 55 சதவீதமாகவும் இருந்தது.

1974 ஏப்பிரலில் இயங்கத்தொடங்கிய பூகொடை ஆலை (பரீட்சையுற்பத்தி) 125,631 இருத்தல் நூலையும், 505,120 யார் துணியையும் உற்பத்தி செய்தது.

(ஆ) இலங்கைத் தோற்பொருட் கூட்டுத்தாபனம் :

காலணியுற்பத்தி 1973 மட்டத்தைவிட 15.8 சதவீதத்தால் அதிகரித்த போதும் 1972 மட்டத்தைவிட 8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. குரும தோல், மரத்தோல் என்பவற்றின் உற்பத்தி 1973ம் ஆண்டு மட்டத்தைவிட முறையே 5.4 24.0 சதவீதங்களாலும், 1972ஆம் ஆண்டு மட்டத்தைவிட 0.8, 49.0 சதவீதங்களாலும் குறைவடைந்தது. 1974இல் இயலளவுப்பயன்பாடு காலணிகளுக்கு 80 சதவீதமாகவும், குரும தோலுற்பத்திக்கு 100 சதவீத மாகவும், மரத்தோலுற்பத்திக்கு 54 சதவீதமாகவும் இருந்தது.

1974இல் காலணி ஏற்றுமதி இடம் பெறவில்லை. குரும தோல் ஏற்றுமதியின் அளவு 1973 மட்டங்களைவிட 84.25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1974இல் உலகச்சந்தையில், தோலுக்கும் தோற்பொருள்களுக்கும் பொதுவான விலை யுயர்ச்சியேற்பட்ட நிலையிலும் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுமதி வருவாய்கள் 59.2 சதவீதத்தால் கணிசமானளவுக்கு வீழ்ச்சியடைந்தன.

ஊழியர்களின் தொகை 823 இலிருந்து 972ஆக அல்லது 18 சதவீதத்தால் உயர்த்தப்பட்டது. 1973இல் கூட்டுத்தாபனம் ரூ. 4 இலட்சத்தை இலாபமாகப் பெற்றது. சப்பாத்துத் தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் 15 இலட்ச நட்டத்தினையடைந்தது. 1974ம் ஆண்டுக்கான மொத்த இலாபம் ரூ. 7 இலட்சமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) மரமும் மரப் பொருட்களும்

(அ) இலங்கை ஒட்டுப்பலகைக் உட்டுத்தாபனம் :

சதுரஅடிச் சமங் கொண்ட முக்கிய பொருள்களின் உற்பத்தி 1973 மட்டத்தைவிட 13.8 சதவீதத்தால் அதிகரித்தது. ஏனைய ஒட்டுப்பலகை உற்பத்திப் பொருள்களின் உற்பத்தி 13.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தும், அரியப்பட்ட மரம் 85.1 சதவீதத்தால் உயர்வடைந்தும் காணப்பட்ட வேளையில் தேயிலைப் பெட்டிகளின் உற்பத்தி (முழுப்பெட்டிகளுத் முறையே 34.3 27.1 சதவீதத்தால்) அதிகரித்துப் பொதுவான விரிவொன்று ஏற்பட்டது. 1973இல் ரூ. 4 07 இலட்சங் கொண்ட ஏற்றுமதிப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 1974இல் 3 34 இலட்சங்களாகும். ஜின்தோட்டையில் உற்பத்தி செய்யப்படும் ஒட்டுப் பலகைப் பொருட்களைப் பொறுத்தளவில் 1974இல் இயலளவுப் பயன்பாடு 75.3 சதவீதமாகவும், சலாவையின் ஒட்டுப்பலகையுற்பத்தியில் 30.3 சதவீதமாகவும், ஒட்டுயரக்கட்டைக்கும், அரியப்பட்ட மரத்துக்கும் முறையே 29.7, 12.4 சதவீதமாகவும் இருந்தது. கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியும் வர்த்தக நடவடிக்கைகளும் 1973இல் நட்டத்தில் இயங்கின நட்டத்தின் மொத்த எண்தொகை 69.27 இலட்சமாக விளங்கியது. 1974ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட இலாபம் ரூ. 15 இலட்சமாகும். இது பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 1.0 சதவீதமானதாகும்.

(ஆ) அரச மரக் கூட்டுத்தாபனம் :

அரசுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து மரத்தைப் பெறுவதையும் (ஆதாயப் பங்கிலிருந்து காட்டுத் திணைக்களத்திற்குச் செலுத்தப்படும் கொடுப்பனவின்மீது) மரம் வெட்டுதலுக்கும், போக்குவரத்துக்கும், அரியப்படாத மரத்தினை வெட்டி அதனது ஆலைகளுக்கு எடுத்துச் செல்லுவதற்கும், அரியப்பட்டதும், அரியப்படாததுமான மர விற்பனைக்கும் தனியார் துறையினை ஈடுபடுத்துவதையும் இக்கூட்டுத்தாபனத்தின் முக்கிய நடவடிக்கைகள் கொண்டிருந்தன. அரச நிறுவனங்களுக்கு புகையிரத சிலிப்பர்க் கட்டைகள் மின்சார கம்பிகளைத் தாங்கும் கம்பங்கள் என்பனவற்றை உற்பத்தி செய்தும் விற்பனை செய்தும்வருகிறது.

1973இன் மட்டத்தைவிட 1974இல் அதன் மொத்த வருவாயின் அளவில் சிறிதளவான மாற்றம் காணப்பட்டது. கையாளப்பட்ட மரக்கட்டைகளின் அளவு 10.5 சதவீதத்தால் 2,672,000 கன சதுர அடிகளால் அதிகரித்தவேளையில் கூட்டுத்தாபனத்தினல் உற்பத்தி செய்யப்பட்ட அரியப்பட்ட மரத்தின் அளவு 10.4 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்தது. பெருமளவில் வர்த்தக நிறுவனமான இக்கூட்டுத்தாபனத்தின் இலாபம் 1973இல் 64.1 இலட்சமாயிருந்தது. இவ்விலாபமானது, உற்பத்தியின் 15.8 சதவீதமாக அல்லது பயன்படுத்தப்பட்ட முதலில் 11.4 சதவீதமாயிருந்தது. 1974ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட இலாபம் ரூ. 30 இலட்சமாகும். இது விற்பனை வருவாயில் 6.8 சதவீதமாகும்.

(ஈ) தாளும், தாள் உற்பத்தியும் அச்சிடுதலும் வெளியிடுதலும்

(அ) கிழைத்தாள் ஆலைக் கூட்டுத்தாபனம் :

1974இல் தாள், தாள் மட்டையுற்பத்தி கணிசமான அளவில் (10.6 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்ததுபோல, தாள் உறைகளின் உற்பத்தியும் (7.6 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்தது இறக்குமதி செய்யப்பட்ட தாள் கூழினது (34.7 சதவீதத்தால்) கிடைக்கத்தக்க தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியே உற்பத்தி வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாயிருந்தது என்று கூறலாம். இவ்வீழ்ச்சியானது பயனற்ற (உள்நாட்டு) தாளின் அதிகரிக்கப்பட்ட கொள்வனவு மூலமாக மட்டுமே ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட தாள் கூழினதும், இரசாயனப் பொருள்களினதும் சராசரி கொ. கா. க விலைகள் முறையே 58.1 சதவீதத்தாலும், 42.0 சதவீதத்தாலும் அதிகரித்தன.

தயாரிக்கப்பட்ட பொருட்களின் விலைகள் 1974 மே 20இல் ஏறக்குறைய 90 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன. 1974ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட இலாபம் ரூ. 167 இலட்சமாயிருந்தது. இதில் ரூ 730 இலட்சம் தாள் உற்பத்திகளினதும், இறக்குமதி செய்யப்பட்ட தாளினதும் விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்றதாகும். 1974இல் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான வருவாய் 7.7 சதவீதமாகும்.

(ஆ) அரச அச்சகக் கூட்டுத்தாபனம் :

கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்ட வேலைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 1973இன் 60 இலட்சத்துக்கு மாருக 1974இல் 101 இலட்சமாயிருந்தது. 1973இல் இலாபமானது 6.7 இலட்சமாயிருக்கையில் 1974ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட இலாபம் 13 இலட்சமாயிருந்தது. 1974ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின்மீதான மதிப்பிடப்பட்ட வருவாய் 6.7 சதவீதமாகும்.

(உ) இரசாயன, பெற்ரேலிய, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள்

(அ) பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்:

கூட்டுத்தாபனத்தின் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த உற்பத்திப் பொருட்களான எரிசோடா, குளோரின் திரவம், உப்புத் தூள் ஆகியவற்றின் உற்பத்தி 1973ம் ஆண்டு மட்டங்களைவிட முறையே 10.6, 11.1, 19.5 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

நீரகப்பாசிக அமில உற்பத்தி 0.3 சத வீதத்தால் அதிகரித்தது. 1974இல் எவ்வித ஏற்றுமதிகளும் இருக்கவில்லை. 1974 இல் எரிசோடா, குளோறின் நீரகப் பாசிச அமிலம் ஆகியற்றின் இயலளவுப் பயன்பாடு முறையே 82.7 சத வீதமாகவும் 49.6 சதவீதமாகவும், 24.6 சத வீதமாகவும் இருந்தது. தயாரிப்பிலிருந்தும், அதனுடன் தொடர்புடைய நடவடிக்னககளிலிருந்தும் பெற்ற 1974ம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட தேறிய இலாபம் 14.61 இலட்சமாகவும், இறக்குமதிகளிலிருந்து பெறப்பட்ட இலாபம் ரூ. 15.41 இலட்சமாகவும் இருந்தன. தயாரித்ததிலிருந்து பெறப்பட்ட இலாபமானது, பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 12.2 சதவீதங்கொண்ட வருவாயைக்காட்டியது.

(ஆ) இலங்கை பெற்ரேலியக் கூட்டுத்தாபனம் (தயாரிப்பு நடவடிக்கைகள்):

முக்கியமான பெற்ரேலிய உற்பத்திகளின் மொத்த வெளியீட்டில், 1973ஆம் மட்டத்தைவிட 248,754 தொன்கள் அல்லது 14.0 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றை தூய்மையாக்கும் நிலையம் காட்டியது. 1973ஆம் ஆண்டின் வெளியீடுகளுடன் ஒப்பிடுமிடத்து மண்ணெண்ணெய், கல்லெண்ணெய், நப்தா, டிசோலின் எண்ணெய், உலை எண்தெய், வானூர்தி ரேபைன் எரிபொருள் பிடுமின் உற்பத்திகளின் அளவு முறையே 21, 20, 16, 13, 12, 21 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தூய்மையாக்கும் நிலையம் மண்ணெண்ணெய், விறகு, நிலக்கரி வாயு ஆகியவற்றிற்குப் பதிலீடாக 715 தொன்கள் கொண்ட பெற்ரேலிய வாயுவை உற்பத்திசெய்தது.

முக்கிய இறக்குமதிப்பொருளான மசகெண்ணெயின் சராசரி கொ, க. விலையானது, தொன்னொன்றுக்கு ரூ. 148 இலிருந்து ரூ. 561.57 ஆக அதிகரிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பு 279 சத வீதமாகும். பெற்ரேலிய உற்பத்திப் பொருட்களுக்குப் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் (இதன்மீது கூட்டுத்தாபனத்தால் தூய்மையாக்கும் நிலையத்துக்குச் செலுத்தப்படும் நிலையான மாற்றச் செலவுகள்) தூய்மையாக்கும் ஆலையின் உற்பத்திப் பெறுமதியானது, 1973 இன் எண் தொகையான ரூ. 3789 இலட்சத்தைவிட மிக உயர்வாக ரூ. 9494 இலட்சமாயிருந்தது. 1973 ம் ஆண்டுக்கான தூய்மையாக்கும் ஆலையின் செய்முறைகளின் திருத்திய கணக்கானது ரூ. 305 இலட்சம்கொண்ட இலாபத்தைக் காட்டுகிறது. இது பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின்மீது 18 சத வீதம் கொண்ட வருவாயாகும். 1974ம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட எண் தொகைகள் கிடைக்கத்தக்கனவாயில்லை.

கலவை இயந்திரத்தினல் பதனிடப்பட்ட உராய்வுப் பொருள்களின் அளவு (3,136,717 கலன்கள்) 1973ம் ஆண்டு மட்டத்திலும் பார்க்க 22 சதவீதத்

தால் வீழ்ச்சியடைந்தது. 1973 இல் தொழிற்பாட்டிலேற்பட்ட இலாபம் ரூ. 46.6 இலட்சமாக அல்லது பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 22 சத வீதமாயிருந்தது.

மெழுகு திரிகளின் உற்பத்தி 1973ம் ஆண்டு மட்டத்தைவிட 9 சத வீதத் தால் வீழ்ச்சியடைந்தது.

(இ) இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனம்:

கூட்டுத்தாபனத்தின் பொதுவாகப் பாவனையிலுள்ள ரயர்களின் 1974இன் வெளியீடானது (33 கிலோகிரும், நிறையுள்ள அல்லது 750 × 20 அளவுள்ள ரயர்) 1973ஆம் ஆண்டின் 100,076 ரயர்களுடனும், 1972 இன் 111,308 ரயர்களுடனும் ஒப்பிடும்போது 121,600 ரயர்களாகும். 1974இல் இயலளவுப் பயன்பாடு 90.7 சத வீதமாகும்.

1973இலும், 1974இலும் பொதுவாகப்பாவனையிலுள்ள ஒரு ரயருக்குரிய இலாபமானது முறையே ரூ. 44 ஆகவும் ரூ 48 ஆகவும் இருந்தது. 1974இல் உள்ளீடுகளின் மீதான செலவு 4.8 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் பொது வாகப்பாவனையிலுள்ள ஒரு ரயருக்குரிய கூலிச் செலவு 60 சதவீதத்தால் அதிகரித்தது. 1973இன் விலை மட்டங்களில் இரு அதிகரிப்புகள் காணப்பட்டன. முதலாவது (1973 டிசெம்பர் 14இல்) ஏறக்குறைய 40 சதவீதத்திலிருக்க இரண்டாவது, (1974 டிசெம்பர் 16இல்) 75 சதவீதமாயிருந்தது. 1974இல் மதிப்பிடப்பட்ட இலாபமாக ரூ. 58 இலட்சம் பெறப்பட்டது. இவ்விலாபமானது பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 6.4 சதவீதமாகும்.

(ஈ) இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் :

1974ஆம் ஆண்டுக்கான தரவுகளும் கிடைக்கத்தக்கனவாயில்லை.

(உ) அரச உரத் தயாரிப்புக் கூட்டுத்தாபனம் :

கூட்டுத்தாபனம் உற்பத்தியைத் தொடங்காதபடியால் 1974ஆம் ஆண்டுக் கான தரவுகள் கிடைக்கத்தக்கனவாயில்லை. இக்கூட்டுத்தாபனம் 1966 இல் நிறுவப்பட்டது.

(ஊ) உலோக சார்பற்ற கனிப்பொருட்கள் (பெற்றோலிய உற்பத்திகள் தவிர)

(அ) இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் :

1974இல் மட்பாண்டப் பொருட்களின் வெளியீட்டில் பெருமள வான வீழ்ச்சியொன்று காணப்பட்ட வேளையில், ஏனைய உற்பத்திப் பொருட்களின் வெளியீடு தொடர்பான நிலையில் அதிகரித்தது. உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் மீதான வெளி நாட்டுச் செலாவணிச் செலவும் நுகரப்பட்ட உலை எண்ணெயின் வெ. நா. செலாவணி அமயச் செலவு ரூ. 57 இலட்சமாக விளங்க. கூட்டுத்தாபனம் ஏற்று மதியிலிருந்து ரூ. 7 இலட்சமும் உள்ளூர் விற்பனைகளிலிருந்து (வெ. செ. உ. சா. நீங்கலாக) ரூ. 10 இலட்சமும் பெறப்பட்டது. இவற்றுக்கான கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்திற் பெறப்பட்டது.

1974இல் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலைப்பட்டியலானது 107 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 72 இலட்சமாகியது. இந்நிலையிலும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்திச் செலவு 1973ஆம் ஆண்டு மட்டங்களை விட அதிக மாற்றமடைந்ததாகக் காணப்படவில்லை. 1974 யூன் 29இல் விலைகளின் மீது மேல் நோக்கிய திருத்தமொன்று காணப்பட்டது. 1974ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட இலாபம் ரூ. 108 இலட்சமாயிருக்கையில், இதில் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீது இலாபம் 14.9 சதவீதமாயிருந்தது. இது 1973ஆம் ஆண்டின் எண்தொகையைவிட ரூ. 21 இலட்சத்தால் உயர் வடைந்தது.

(ஆ) வரையறுக்கப்பட்ட இலங்கைப் பீங்கான் :

இந்நிறுவனம், அடிப்படையில் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பிரிவு ஆக விளங்குவதோடு ஜப்பான் நொறிரேக் நிறுவனத்தினல் வழங்கப்பட்ட மூலதனத்தில் 33 சதவீதத்தைக் கொண்டு 1973 ஒற்ரோபரில் தொழிற்படத் தொடங்கியது.

1973இல் எவ்வித ஏற்றுமதிகளும் இல்லாத வேளையில் 1974இல் ஏற்றுமதிகளின் க. ஏ. பெ. பெறுமதி ரூ. 53.5 இலட்சமாயிருந்தது. 1974இல் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் கொ கா. க. பெறுமதியானது ரூ. 33.1 இலட்சமாகும்.

1974இல் மட்பாண்டப் பொருட்களின் வெளியீடானது 2,684,689ஆக இருந்தது இதில் 15 சதவீதம் உள்ளூரில் விற்பனைசெய்யப்பட்டது.

இயலளவுப் பயன்பாடு (பீங்கான் பொருட்களின் எண்ணிக்கையடிப் படையில்) 1974இல் 65 சதவீதமாயிருந்தது. இத்தகைய நிலை நிலவியதற்கு பாரத்தைப் பொறுத்தவரை பெரிய அளவிலான பொருட்கள் தயாரிக்கப்பட்டதேகாரணமாகும்.

1974இல் வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 604 ஆகும்.

1973இல் ஏற்பட்ட நட்டம் ரூ. 20 இலட்சமாகவும், 1974இல் ஏற்பட்ட நட்டம் ரூ. 17 இலட்சமாகவும் விளங்கியது.

(இ) இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் :

1974இல் சீமெந்தின் வெளியீடு 466,136 தொன்களையடைந்தது. இவ் வதிகரிப்பு 1973 மட்டத்தைவிட 10.9 சதவீதமாகவும். 1972 மட்டத்தைவிட 19.1 சதவீதமாகவுமிருந்து. இயலளவுப் பயன்பாடு காங்கேசன்துறை, புத்தளப் பொறிகளில் முறையே 76,67 ஆகும்.

கூட்டுத்தாபனம் ரூ. 118 இலட்சம் பெறுமதியான செலாவணி மூலவளங்களையும் ரூ. 17,742,900 க. ஏ. பெ. ஏற்றுமதி செய்திருக்கக்கூடிய, 11,379,270 கொண்ட உலை எண்ணெயும் உபயோகித்தது. இவ்வாறு ஒரு தொன் சீமெந்தின் உற்பத்தியில் நேரடியாகச் செலவழிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியானது ரூ. 63.49 ஆகும்.

1974ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில், காங்கேசன்துறைத் தொழிற்சாலை 40 516 தொன்கள் கொண்ட சீமெந்தை ஏற்றுமதி செய்ததாகும். ரூ. 125 இலட்சங்கொண்ட க. ஏ பெ. எண் தொகையைப் பெற்றது. ஏற்றுமதி வருமானம், வெ. செ. உ. சா. உள்ளடக்கி, மிக உயர்ந்ததாக தொன்னொன்றுக்கு ரூ 509ஆக இருந்தது. இது, உள்ளூர்ச் சந்தையில் விற்கப்பட்ட சீமெந்தின் சராசரி விற்பனை விலையை விடக் கணிசமானளவு மேற்பட்டதாகும்.

சீமெந்து விலைகள், 1973 சனவரி 22இல் ஏறக்குறைய 11 சதவீதத்தாலும், 1974 பெப்புருவரி 18இல் ஏறக்குறைய 20 சதவீதத்தாலும், மீண்டும் 1974 திசெம்பர் 16இல் ஏறக்குறைய 23 சதவீதத்தாலும் அங்கீகரிக்கப்பட்டன. 1974ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட (வரிக்கு முந்திய) இலாபம் 217 இலட்சமாயிருந்தது. இவ்விலாபமானது பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான 6.5 சதவீத வருவாயாகும்.

(இ) கனிப்பொருள் கூட்டுத்தாபனம் :

1973இன் தொகைகளைப் பொறுத்தவரையில் இல்மனைற் உற்பத்தி 13.2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று 79,817 தொன்களாக விளங்கியவேளையில் றூட்டைல் (Rutile) உற்பத்தி 35.5 சதவீதத்தால் அதிகரித்து 3000 தொன்களாக விளங்கியது. 1974இல் இல்மனைற், றூடைல் என்பனவற்றின் ஏற்றுமதிகள் முறையே 2322 தொன்களாலும், 445 தொன்களாலும் குறைவடைந்தன. எனினும், 1974இல் ரூ. 162.99 இலட்சம் பெருமளவுக்கு உயர்ந்த விற்பனைப் பெறுமதிகள் கிடைக்கப்பெற்றன. ஒப்புநோக்குகையில் ரூ. 118 80 இலட்சம் 1973இல் பெறப்பட்டது.

கூட்டுத்தாபனம் 1973இல் ரூ. 42.9 இலட்ச இலாபத்தையும், 1974இல் ரூ. 73.1 இலட்ச இலாபத்தையும் பெற்றது. இது, பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 35.3 சதவீத வருமானத்தைப் பிர[illegible]பலிக்கிறது.

(ஈ) அரச காரீயக் கூட்டுத்தாபனம் :

கூட்டுத்தாபனம், போகல சுரங்கம் (1971 மே, 18இல் தேசியமயமாக்கப்பட்டாலும் 1975 சனவரி 1 இலேயே கூட்டுத்தாபனத்துக்கு உடைமையாக்கப்பட்டது) கொலங்கக சுரங்கம் (1971 ஒற்றோபர் 22இலிருந்து), ககட்டகக சுரங்கம் (1972 ஏப்பிறல் 21இலிருந்து), ருகல சுரங்கம் (இங்கு 1073 யூலை 1 இலிருந்து காரீய ஆய்வைக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்தது) ஆகிய நான்கு சுரங்கங்களைச் சொந்தமாக வைத்திருந்து தொழிற்படுத்துகிறது. 1973ஐ விட 1974இல் காரீய உற்பத்தி 34 சதவீதத்தால் அதிகரித்தது. தேசியமயமாக்கப்பட்டபின் முதலாவது தொழிற்பாட்டு ஆண்டான 1972உடன் 1974ஐ ஒப்பிடின் உற்பத்தியில் அதிகரிப்பானது போகலவில் 11.4 சதவீதமாகவும், கொலன்ககவில் 64.0 சதவீதமாகவும், ககட்டககவில் 283 3 சதவீதமாகவும் காணப்பட்டது. 1974இல் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட காரீயத்தின் அளவுகள் முறையே 10,262 தொன்களாகவும், 9,622 தொன்களாகவும் இருக்கையில் ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 183 இலட்சமாயிருந்தன.

தேசியமயமாக்கப்பட்ட பின் முதலாவது தொழிற்பாட்டு ஆண்டில் நடைபெற்ற செயலாற்றத்தையொட்டி 1974இல் கணிசமான முன்னேற்றம் அடையப்பட்டாலும் (1972), ஏற்றுமதி அளவைவிட 1973இலும் 1972இலும் உற்பத்தியின் அளவானது கணிசமானளவில் குறைந்திருந்ததென்பது (முறையே 20.1 சதவீதத்தாலும், 27.8 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது) கவனிக்கப்படவேண்டியதாகும். 1965-69 காலப்பிரிவில் எந்த ஆண்டிலும் செய்யப்பட்ட ஏற்றுமதியைவிட, சுங்கத்தால் பதிவுசெய்யப்பட்டபடி 1970இலும் இன்றும் கணிசமானளவில் குறைந்ததாகவே காணப்படுகிறது. (அட்டவணை II (ஈ) 7அ பார்க்க) ஏற்றுமதிகளின் ஆண்டுச் சராசரி அளவு 1965–70 காலப்பகுதியில் 10,045 தொன்களாயிருந்தது. அதேவேளையில் 1974க்குரிய கிடைக்கத்தக்க ஏற்றுமதி அதாவது 1974க்குரிய உற்பத்தி (10,262 தொன்கள்) உள்ளூர் நுகர்ச்சியில் 137 தொன்களைக் கழித்து 10,125 தொன்களாகும். 1968–70 காலப்பிரிவானது கவனத்திற்கெடுக்கப்பட்டால் (ஏற்றுமதி வருவாய்கள்மீது வெ. செ. உ. சா. செலுத்தப்படக்கூடியதாயிருந்தபோது) 1974ஆம் ஆண்டின் வெளியீட்டிலிருந்து ஏற்றுமதிக்குக் கிடைக்கக்கூடிய 10,125 தொன்களிலும் பார்க்க 5.4 சதவீதத்தாலும், 1974இல் ஏற்றுமதி செய்யப்பட்ட காரீயத்தின் உண்மையான அளவிலும் (9,622 தொன்கள்) 9.8 சதவீதத்தாலும் உயர்வாக இருந்த ஆண்டுச் சராசரி ஏற்றுமதியளவானது 10,667 தொன்களாகும்.

1973இன் இலாபமான 77 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனம் 1974இல் மதிப்பிடப்பட்ட இலாபமான ரூ. 110 இலட்சத்தைப் பெற்றது. அதிகரிக்கப்பட்ட உற்பத்தியினாலும் விற்பனையினாலும் உயர்ந்த இலாபமானது பெருமளவில் பெறப்பட்டது.

**அட்டவணை II (ஈ) 7 அ**

**காரீயம் ஏற்றுமதிகள்**

| | கனவளவு (000 அந்தர்) | பெறுமதி (ப. இ. ரூ.) | முழு விலைகள் |
|---|---|---|---|
| 1965 ... ... ... | 175 | 5.4 | 31.05 |
| 1966 ... ... ... | 197 | 6.2 | 31.30 |
| 1967 ... ... ... | 204 | 6.7 | 32,83 |
| 1968 ... ... ... | 213 | 7.8 | 36.91 |
| 1969 ... ... ... | 225 | 8.3 | 86.78 |
| 1970 ... ... ... | 193 | 8.9 | 46.39 |
| 1971 ... ... ... | 153 | 9.0 | 59.10 |
| 1972 ... ... ... | 118 | 8.8 | 74.72 |
| 1973 ... ... ... | 122 | 11.6 | 94,93 |
| 1974 ... ... ... | 192 | 18.3 | 95.20 |

மூலங்கள்: இலங்கை சுங்கப் பகுதி, அரசாங்கக் காரீயக் கூட்டுத்தாபனம்.

(எ) அடிப்படை உலோகக் கைத்தொழில்கள்

(அ) இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் :

1974இல் சுருட்டப்பட்ட உற்பத்திகளின் வெளியீடு 28,982 தொன்களாக விளங்கி, 21.2 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. எனினும் இது 1972இலும் பார்க்க 36.2 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இயலளவுப் பயன்பாடு 33.3 சதவீதமாயிருந்தது. எனினும் கம்பியுற்பத்திகளின் வெளியீடு 7,234 தொன்களாக அல்லது 68 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. 1974இல் எவ்வித ஏற்றுமதியும் இருக்கவில்லை.

1974இல் பெறப்பட்ட ரூ. 255 இலட்சங்கொண்ட இலாபமானது பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 15.3 சதவீத வருவாயாகும். 1973இல் இலாபம் 128 இலட்சமாயிருந்தது. சுருட்டப்பட்ட உற்பத்திகளின் ஒரு தொன்னுக்கான இலாபம், 1973இன் ரூ. 471இலிருந்து 1974இல் ரூ. 729 ஆக உயர்ந்தது. தொன்னுக்கான சராசரிச் செலவு ரூ. 684 ஆகவும், சராசரி வருமானம் ரூ. 942 ஆகவும், உயர்ந்தன. உருக்கின் விலைகள் 1974 பெப்பிரவரியில் கணிசமானளவு உயர்த்தப்பட்டன.

(ஏ) தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்களும், இயந்திரமும் இணைப்புக்களும்

(அ) அரச வன்கலக் கூட்டுத்தாபனம் :

மண்வெட்டிகள், ஏனைய விவசாய உபகரணங்கள், ஆகியவற்றினுற்பத்தி 1973ஆம் ஆண்டு மட்டங்களைவிட முறையே 5 சதவீதத்தாலும் 1 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தவேளையில், சுகாதாரப் பொருட்கள் பொறியியற் கருவிகள், வெட்டுக் கருவிகள் ஆகியவற்றினுற்பத்தி முறையே 33, 44, 5 சதவீதங்களால் வீழ்ச்சியடைந்தன. முந்திய ஆண்டைப்போலவே 1974இல் வார்ப்புச்சாலையில் வார்ப்பிரும்பு உற்பத்திகளின் உற்பத்தி குறைவடைந்தது. இது நிறுவப்பட்ட இயலளவு ஆற்றலில் 51.7 சதவீதமாகும். அதிகமான வார்ப்பிரும்புப் பொருட்களை உள்ளூர் சந்தைகளிலும், வெளிநாட்டுச் சந்தைகளிலும் சந்தைப்படுத்துதலிலேற்பட்ட இடர்ப்பாடுகள் உற்பத்திச் செயலாற்றத்தைப் பாதித்ததற்குக் காரணமாயிருந்தன. 1973இல் வார்ப்பிரும்புப் பொருட்களின் ஏற்றுமதி ரூ. 24.0 இலட்சமாயிருந்தபோதும், 1974இல் கூட்டுத்தாபனத்தின் வார்ப்பிரும்புப் பொருட்களோ அல்லது வேறு எந்த உற்பத்திப் பொருட்களோ ஏற்றுமதி செய்யப்படவில்லை. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவிலேற்பட்ட அதிகரிப்புக் காரணமாக (வெ.செ.உ.சா கொடுபட வேண்டியது) 1973இன் மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1974இல் அநேகமான உற்பத்திகளின் உற்பத்திச் செலவானது ஏறக்குறைய 35 சதவீதத்தால் அதிகரித்தது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் அதிகமான பொருட்களின் விலையில் கணிசமானதொரு உயர்ச்சி (சுமார் 50 சதவீத) 1974 மாச்சு 30இல் காணப்பட்டது. 1974இல் மதிப்பிடப்பட்ட நட்டம் ரூ. 30 இலட்சமாகும். 1973இல் ஏற்பட்ட நட்டம் ரூ. 44 இலட்சமாகும்

4. ஏனைய அரசாங்க முயற்சிகள்

(அ) வேளாண்மை, காட்டுத்தொழில் மீன்பிடி

(அ) இலங்கை கடற்ருெழில் கூட்டுத்தாபனம் :

ஈரமாக்கப்பட்ட, குளிரூட்டப்பட்ட மீன் உற்பத்தி 1974இல் 4,364,99 தொன்களாக, 1973இல் இருந்ததைவிட 4.4 சதவீதத்தால் உயர்ந்தபோதும் 1971ஆம் ஆண்டின் வெளியீட்டுடன் ஒப்பிடும்போது 4.2 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. உற்பத்தி செய்யப்பட்ட சுறு ஈரல் எண்ணெயின் அளவில் 25.8 சதவீதங்கொண்டதொரு வீழ்ச்சி காணப்பட்டது. கருவாட்டு உற்பத்தி 48.4 சதவீதத்தால் அதிகரித்து 275,85 தொன்களாக விளங்கியது. எனினும் இது மொத்தக் கருவாட்டு இறக்குமதியில் 2.2 சதவீதத்தை மட்டுமே உள்ளடக்கியது. தகரத்திலடைக்கப்பட்ட மீனின் உற்பத்தி 49.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தயாரிக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை 60 இலிருந்து 25 ஆக அல்லது 58.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், பனிக்கட்டி உற்பத்தியில் 94.2 சதவீதங்கொண்ட உயர்ச்சியொன்று காணப்படடது. 1965ஆம் ஆண்டிலிருந்து தனியார் துறையுடன் போட்டியாக இயங்கும் நிலையில் 1965ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பட்டுவரும் இக்கூட்டுத்தாபனம் இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலில் மேலும் ஒரு குறிப்பிடத்தக்கதொரு தாக்கத்தையேற்படுத்த வேண்டும்.

மீனிலிருந்து பெறப்படும் ஏற்றுமதி வருவாய் ரூ. 27 இலட்சமாக அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 1974இல் இவ்வுற்பத்திகளிலிருந்து பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய்களில் 10.1 சதவீதமாகும். தகரத்திலடைக்கப்பட்ட மீனிலிருந்து பெறப்பட்ட க. ஏ. பெ. வருவாய் 2 இலட்சமாயிருந்தவேளையில், மலேசியக் கரையோரத்துக்கு அப்பால் மீன்பிடித் தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய் ரூ. 412 இலட்சமாயிருந்தது.

1974இல் ஊழியர்களின் எண்ணிக்கை 1,308 இலிருந்து 1143 ஆக குறைவடைந்தது.

1973இல் ரூ. 60 இலட்சங்கொண்ட இழப்பிலும் 1974இல் ரூ. 19 இலட்சங்கொண்ட மதிப்பிடப்பட்ட இழப்பிலும் கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்கியது.

(ஆ) அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் :

ஆய்வுக்குரிய இவ்வாண்டில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், முந்திய ஆண்டின் 25 தோட்டங்களுக்குப் பதிலாக 67 தோட்டங்களை முகாமைப்படுத்தியது. பயிரிடப்பட்ட பண்படுத்தப்பட்ட மொத்த நிலப்பரப்பு, 39,235 ஏக்கரிலிருந்து 73,164 ஏக்கராக 86 சதவீதத்தால் அதிகரித்தது இதற்கு, நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவினால் அதற்குச் சொந்தமாக்கப்பட்டிருந்த அதிக உற்பத்தியுள்ள தோட்டங்களை இக்கூட்டுத்தாபனத்துக்குக் கையளிப்பதென்று மேற்கொள்ளப்பட்ட முடிபும், ஸ்ரேலிங் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு

உடைமையாயிருந்த சில தோட்டங்களைக் கொள்வனவு செய்தமையும் காரண மாகும். இதிலடங்கிய நிலப்பரப்பு 16,256 ஏக்கர்கள்கொண்ட தேயிலை விளை நிலமும். 3, 365 ஏக்கர்கொண்ட றப்பர் விளைநிலமும், 6,021 ஏக்கர்கள் கொண்ட தெங்கு விளைநிலமுமாகும். தற்போது, இலங்கையில் இக்கூட்டுத்தா பனம் மிகப்பெரிய தனிப்பட்ட நிலவுடைமையாளராகும்.

1974இல் தேயிலை பயிரிடப்பட்ட ஒரு ஏக்கருக்குரிய மொத்த இலாபம் ரூ. 255 ஆக இருக்கையில் ஒரு ஊழியரின் வருமானம் ரூ. 251 ஆக இருந்தது. பெருந்தோட்டங்களையும், தொழிற்சாலைகலையும் ஒருங்கிணைத்துப் பார்க்கையில் கூட்டுத்தாபனம் 1974இல் மதிப்பிடப்பட்ட இலாபமரன ரூ. 131 இலட்சத்தைப் பெற்றது. இக்கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகளின் 1974 இன் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் அட்டவணை II (ஈ) 8இல் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை II (ஈ) 8

### அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்(அ)

| விடயங்கள் | 1970/71 | 1971/72 | 1973 | 1974 |
|---|---|---|---|---|
| 1. முதலிடப்பட்ட மூலதனம் (ரூ. '000)(ஆ) .. | 40,965 | 46,253 | 49,002 | 64,853 |
| பெருந்தோட்டங்களில் ... .. | 33,815 | 39,095 | 41,844 | 57,695 |
| தொழிற்சாலையில் ... .. | 7,150 | 7,158 | 7,158(இ) | 7,158 (இ) |
| 2. பெருந்தோட்டங்களில் ... ... | | | | |
| எண்ணிக்கை ... ... .. | 13 | 23 | 29 | 67 |
| ஏக்கர்கள் ... ... | 12,827 | 32,887 | 39,235 | 73,164 |
| பயிரிடப்பட்ட ஏக்கர்கள் ... .. | 9,814 | 22,853 | 27,250 | 48,598 |
| வருவாய் (ரூ. '000) ... ... | 5,936 | 22,815 | 28,307 | 62,572 |
| இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ரூ. '000) (இ) ... | +448 | +1,785 | + 2,262 | +12,403 |
| தொழில்நிலை (எண்ணிக்கை) .. | 6,775 | 19,146 | 21,098 | 49,340 |
| 3. தொழிற்சாலைகள் ... ... | | | | |
| எண்ணிக்கை ... ... ... | 4 | 4 | 4 | 4 |
| வருவாய் (ரூ. '000) ... ... | 3,802 | 4,284 | 3,921 | 5,282 |
| இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ரூ. '000) (இ) ... | + 29 | — 513 | + 136 | + 661 |
| தொழில்நிலை (எண்ணிக்கை) ... | 226 | 290 | 290 | 271 |
| 4. மொத்தம் (வருவாய் ரூ. '000) .. | 9,738 | 27,099 | 32,228 | 67,854 |
| இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ரூ. '000) (இ) ... | +477 | +1,272 | + 2,398 | +13,064 |
| தொழில்நிலை (எண்ணிக்கை) ... | 7,001 | 19,436 | 21,388 | 49,611 |

மூலம்: அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்.

(அ) எண்தொகைகள் ஒற்றோபர்–செத்தெம்பர் வரையிலான கணக்காண்டுக்குரியவை; ஆனல் 1971/72 ஆம் ஆண்டிற்குரிய எண்தொகைகள் 1972 திசெம்பரில் முடிவடையும் 15 மாத காலப் பகுதிக்குரியவையாகும். 1973/74 ஆம் ஆண்டு எண்தொகைகள் கலண்டர் ஆண்டுக்குரியவை.

(ஆ) கணக்காண்டு முடிவில் உள்ளபடியான மொத்தத் தொகை.

(இ) வரிவிதிப்பதற்கு முந்திய இலாபம்.

(ஈ) 1972 ஆம் ஆண்டு வரைக்கும்.

(ஆ) போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்

(அ) இலங்கைப் போக்குவரத்துச் சபை :

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை 6,643 இலிருந்து 7,005 ஆக அதிகரித்தாலும், தொழிற்பட்ட சராசரி வாகனங்களுக்கும், தேவைப்பட்ட எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள குறைவானது, 1972இல் 180 ஆகவும், 1973இல் 660 ஆகவும் இருந்ததை ஒப்பிடின், 1974இல் 974 ஆகும். நாளுக்கான சராசரி வாகனப் பாவிப்பின் எண்ணிக்கை 1972ஆம் ஆண்டின் 154 மைல்களிலிருந்தும், 1973ஆம் ஆண்டின் 150 மைல்களிலிருந்தும் இவ்வாண்டில் 149 மைல்களாக வீழ்ச்சியடைந்தது.

சபையினுல் தொழிற்படுத்தப்பட்ட மைல்களின் எண்ணிக்கை 1974இல் 234,7650 இலட்சமாகவும், 1969/70இன் பின்பு ஏற்பட்ட மிகக் குறைந்த அளவாகவும், திட்டமிடப்பட்ட மைல்களின் அளவில் 77.6 சதவீதமாக வுமிருந்தது. ஐந்து வேலை நாட்கள் கொண்ட கிழமையின் தொழிற்பாடு காரணமாக திட்டமிடப்பட்ட மைல்களின் 1973 இலும் பார்க்க 2.5 சதவீதத் தால் குறைவடைந்தது. இழக்கப்பட்ட மைல்கள் 1972இலும் பார்க்க 46.1 சதவீதத்தாலும், 1973இலும் பார்க்க 9.1 சதவீதத்தாலும் உயர்வடைந் திருந்தது. இதுவே இதுகால வரையில் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய இழப்பாகும். பயணி மைல்களின் எண்ணிக்கை 1973 மட்டத்திலும் 1972 மட்டத்திலும் முறையே 14.1 சதவீதத்தாலும், 9.1 சதவீதத்தாலும் குறை வடைந்து 79,040 இலட்சம் மைல்களாயிருந்த வேளையில் மொத்த ஆசன மைல்கள் 1973 ஆண்டு மட்டத்திலும், 1972 மட்டத்திலும் முறையே 7.4 சத வீதத்தாலும், 13.7 சதவீதத்தாலும் குறைவடைந்தது. 1974இல் பேருந்தி ஓட்டிகளுக்கு தூண்டுதல் திட்டம் உருவாக்கப்பட்ட நிலையிலும்' ஏற்றிச் செல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை 63.8 சதவீதமாக விளங்கியது. 1973 உடன் ஒப்பிடுகையில், இது 5 சதவீதம் குறைவுடையதாகும். ஒரு பேருந்தியிற் பணி புரிந்த நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 1973இல் 11.5 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் 1974இல் 12.3 ஆகும்.

பேருந்துக் கட்டணங்களில் ஏற்பட்ட கணிசமான உயர்ச்சியின் காரணமாக (ஏறக்குறைய 25 சதவீதம்) பிரயாணிகளின் கட்டணங்களிலிருந்து பெறப்படும் வருவாய் 1973 மட்டங்களைவிட ரூ. 1599.90 இலட்சத்தால் அல்லது 38.6 சத வீதத்தால் அதிகரித்தது. செலவினமும் 1973ஐ விட 1083.41 இலட்சத்தால் அல்லது 23.3 சதவீதத்தால் அதிகரித்தமையால் ரூ. 338.4 இலட்சங்கொண்ட 1973ஆம் ஆண்டுக்கான நட்டமானது, 1974இல் ரூ. 212.0 இலட்சங்கொண்ட இலாபமாகியது.

(ஆ) இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களம் :

1974இல் பயணி மைல்களின் எண்ணிக்கை 11 சதவீதத்தால் அதிகரித்துள்ள தென அத்துடன் பொருட்கள் மைல்களின் எண்ணிக்யும் 5.5 சதவீதத்தால் உயர்ந்துள்ளதென மதிப்பிடப்பட்டது. எனினும், 1974இல் பிரயாணி மைல்களின் எண்ணிக்கை 11 சதவீதத்தாலும், பொருட்கள் கொண்டுசெல்லும் மைல்களின் எண்ணிக்கை 5.5 சதவீதத்தாலும் அதிகரிக்குமென மதிப்பிடப் பட்டது.

# அட்டவணை II (ஈ) 9

## போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்

| இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம் 1 | 1971 | 1972 | 1973 | 1974 |
|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (ரூ. '000)2 | 42,881 | 31,641 | 46,567 | 49,690 |
| 2. பாதை மைல்களில் ... | 1,140 | 1,140 | 1,140 | 1,140இ |
| 3. ஊர்திகள் (எண்ணிக்கை) ... | 1,233 | 1,243 | 1,271 | 1,297 |
| (அ) தொடர்வண்டி இயக்கும் பொறிகள் ... | 263 | 265 | 270 | 282 |
| (ஆ) வண்டிகள் ... | 970 | 978 | 1,001 | 1,015 |
| 4. நடைபெற்ற போக்குவரத்து | | | | |
| (அ) பயணிகள் (ப. இ.) 4 ... | 81.8 | 85.0 | 89.0 | 96.0இ |
| (ஆ) பொருட்கள் (ப. இ. தொன்கள்)5 ... | 1.76 | 1.7 | 1.8 | 2.0இ |
| 5. போக்குவரத்து மைல்கள் | | | | |
| (அ) பயணி மைல்கள் (ப. இ. மைல்கள்) ... | 1,724 | 1,924 | 2,051 | 2,278இ |
| (ஆ) பொருட்கள் மைல்கள் (ப. இ. தொன்) மைல்கள் . | 203.8 | 207.4 | 199.6 | 210,5இ |
| 6. மொத்த வருமானம் (ஆயிரம் ரூபாய்களில்) ... | 116,279 | 177,858 | 149.833 | 186,158 |
| (அ) பயணிகள் | 63,566 | 93.956 | 83,159 | 109,614 |
| (ஆ) பொருட்கள் ... | 48,422 | 69,333 | 53.043 | 63,054 |
| (இ) ஏனையவை ... | 4,291 | 14,569 | 13,631 | 13,490 |
| 7. மொத்தச் செலவு6 (ரூ. '000) ... | 147,010 | 194,922 | 167,707 | 228,218 |
| 8. இலாபம் (+) அல்லது நட்டம் (—) (ரூ. '000)7 | – 61,907 | – 80,025 | – 81,106 | – 131,140 |
| (அ) தொழிற்படுகையில் | – 31,176 | – 17,064 | – 17,874 | – 42,060 |
| (ஆ) முழுமையாக .. | – 30,731 | – 62,961 | – 63,232 | – 89,080இ |
| 9. தொழில் நிலை | | | | |
| (அ) தொழிலிலமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை8 | வி. கி. | 25,858 | 25,207 | 26,257 |
| (ஆ) மொத்தக் கூலிச் செலவு (ரூ. '000)9 | வி. கி. | 107,676 | 88,713 | 99,574 |
| **இலங்கைப் போக்குவரத்துச் சபை 1** | **1971** | **1972** | **1973** | **1974** |
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம்2 (ரூ.' 000) .. | 376,494 | 466,165 | 518,686 | 591,711 |
| (அ) ஊர்திகள் ... | 294,364 | 361,132 | 398,226 | 443,226 |
| (ஆ) ஏனையவை ... | 82.130 | 105,103 | 120,460 | 148,485 |
| 2. ஊர்திகளின் (எண்ணிக்கை) | | | | |
| (அ) சொந்தத்திலிருந்தவை .. | 6,404 | 6,300 | 6,643 | 7,005 |
| (ஆ) இயங்கும் ஊர்திகளின் தொகை | 5,834 | 5,923 | 6,034 | 6,235 |
| (இ) இயங்கமுடியுமான தொகை . | 5,813 | 4,301 | 4,481 | 4,622 |
| (ஈ) தேவையானவை | 4,940 | 4,979 | 5,250 | 5,276 |
| (உ) இயங்கிய சராசரி .. | 4,494 | 4,799 | 4,590 | 4,302 |
| 3. மைல்களின் தொகை (ப. இ. மைல்களில்) | | | | |
| (அ) அட்டவணையிடப்பட்ட ... | 301.2 | 311.526 | 310.275 | 302.409 |
| (ஆ) இயங்கிய ... | 241.1 | 270.083 | 250.899 | 234.765 |
| (இ) இழந்த ... | 64.3 | 50.799 | 68.038 | 74.243 |
| (ஈ) பாவிக்கப்படாத ... | 1.9 | .945 | .896 | .899 |
| 4. பயன்படுத்தப்பட்ட திறன் | | | | |
| (அ) மொத்த இருக்கை மைல்கள் (ப. இ. மைல்கள்) ... | 12,625.800 | 14,345.986 | 13,373.497 | 12,381.089 |
| (ஆ) கொண்டு செல்லப்பட்ட மொத்தப் பயணிகள் (ப. இ. எண்) ... | 1,335.800 | 1,390.351 | 1,405.164 | 1,248.800 |
| (இ) மொத்தப் பயணி மைல்கள் (ப. இ. மைல்கள்) ... | 7,419.100 | 8,697.918 | 9,213,742 | 7,904,975 |
| (ஈ) பார அம்சம் (%) .. | 58.8 | 60.6 | 68.9 | 63.8 |
| (உ) பயன்படுத்தப்பட்ட சராசரி ஊர்திகள் (ஒரு நாளுக்கு மைல்கள்) | 147 | 154 | 150 | 146 |
| 5. வருமானம் (ரூ. '000) | | | | |
| (அ) பயணிகள் கட்டணம் ... | வி. கி. | 487.442 | 414.056 | 574,046 |
| (ஆ) ஏனையவை .. | வி. கி. | 18.423 | 16.846 | 20.238 |
| 6. செலவு10 (ரூ. '000) ... | 366,743 | 534,135 | 464.740 | 573.081 |
| 7. சம்பளச் செலவு (ரூ. '000) ... | 203,991 | 231,596 | 236.388 | 250,679 |
| 8. தொழில் நிலை (எண்தொகை)8 .. | 48,140 | 53,989 | 52,712 | 52.802 |
| 9. இலாபம் (+) அல்லது (—) நட்டம் எ (ரூ. '000)7 | – 56,707 | – 28,270 | – 33.838 | 21,203 |
| **வரையறை செய்யப்பட்ட இலங்கை வானூர்தி பணி1** | **1971** | **1972** | **1973** | **1974 *** |
| 1. சொத்துக்களின் பெறுமதி2 (ரூ. '000) .. | 140,304 | 103,004 | 92,698 | வி. கி. |
| 2. கொண்டு செல்லப்பட்ட பயணிகளும் பொருட்களும் | | | | |
| (அ) பயணத்தர்கள் (எண்ணிக்கை) ... | 119,479 | 115,733 | 109,200 | வி. கி. |
| (ஆ) பொருட்கள் (தொன்கள்) ... | 630 | 673,585 | 761,286 | வி. கி. |
| 3. பயணி மைல்களும் தொன் மைல்களும் | | | | |
| (அ) பயணி மைல்கள் (ரூ. '000) . | 69,710 | 239,825 | 352,269 | 203,216 |
| (ஆ) பொருட்கள் தொன் மைல்கள் (ரூ. '000) ... | 1,620 | 3,456 | 2,943 | வி. கி. |
| 4. பயன்படுத்தப்பட்ட திறன் (பார அம்சம்%) | | | | |
| (அ) உள்நாட்டுச் சேவைகள் ... | 53.5 | 44.45 | 61.67 | வி. கி. |
| (ஆ) பிரதேச சேவைகள் ... | 33.0 | — | வி. கி. | வி. கி. |
| (இ) பன்னாட்டுச் சேவைகள் ... | — | 34.70 | 66.75 | வி. கி. |
| 5. மொத்த வருமானம் (ரூ. '000) ... | 19,097 | 82,713 | 115,411 | 105,585 |
| 6. மொத்தச் செலவு (ரூ. '000) ... | 55,549 | 75,888 | 109,908 | 98,384 |
| 7. இலாபம் (+) அல்லது (—) நட்டம் (ரூ. '000) 7 .. | + 2,078 | + 6,825 | + 5,503 | + 8,201இ |
| 8. தொழில் நிலை (எண்ணிக்கை)8 .. | 716 | 806 | 925 | 1,07 |

* மதிப்பீடு.

தொடரும்

## அட்டவணை II (ஈ) 9

## போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்

| இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் | 1971 | 1972 | 1973 | 1974 |
|---|---|---|---|---|
| 1. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மூலதனம் (ரூ.'000) | 8,160 | 15,434 | 17,124 | 41,834 |
| 2. மொத்த வருமானம் (ரூ. '000) அவற்றின் வெளிநாட்டுச்செலாவணி வருமானம் | 1,765 | 50,218 | 76,835 | 145,278 |
| 3. மொத்தச் செலவு (ரூ. '000) | 1,010 | 43,369 | 63,040 | 112,440 |
| 4. இலாபம் (+)/நட்டம்(—)7 (ரூ. '000) | + 1,812 | + 6,849 | +13,795 | +32,838 |
| 5. தொழில் நிலை8 | 108 | 80 | 121 | 116 |
| **கொழும்புத் துறைமுக ஆணைக் குழு 1** | 1971 | 1972 | 1973 | 1974 |
| 1. மூலதனச் செலவு 2, 3 (ரூ.'000) | 343,761 | 362,590 | 374,654 | 311,886 |
| (அ) கொழும்புத் துறைமுகம் | 303,852 | 321,488 | 330,217 | 335,025 |
| (ஆ) காலித் துறைமுகம் | 33,610 | 33,944 | 34,480 | 34,629 |
| (இ) திருகோணமலைத் துறைமுகம் | 2,331 | 3,098 | 4,322 | 5,454 |
| (ஈ) ஏனைய துறைமுகங்கள் | 3,968 | 4,060 | 5,635 | 6,778 |
| 2. வருமானம் (ரூ. '000) | 50,574 | 51,716 | 40,802 | 47,182 |
| (அ) கொழும்புத் துறைமுகம் | 50,309 | 51,314 | 40,475 | 46,939 |
| (ஆ) ஏனைய துறைமுகங்கள் | 265 | 402 | 326 | 243 |
| (i) காலித் துறைமுகம் | 72 | 134 | 114 | 42 |
| (ii) திருகோணமலைத் துறைமுகம் | 179 | 257 | 211 | 201 |
| (iii) ஏனைய துறைமுகங்கள் | 14 | 11 | 1 | — |
| 3. வேலைச் செலவு (ரூ. '000) 15 | 30,550 | 30,293 | 30,629 | 31,555 |
| (அ) கொழும்புத் துறைமுகம் | 29,785 | 29,124 | 29,033 | 30,208 |
| (ஆ) ஏனைய துறைமுகங்கள் | 742 | 1,140 | 1,432 | 1,253 |
| (இ) கரையோரப் பாதுகாப்பு | 24 | 29 | 164 | 94 |
| 4. மிகை (+) அல்லது குறை (—) 14 ரூ. '000 | + 3,034 | + 2,595 | வி. கி. | வி. கி. |
| (அ) கொழும்புத் துறைமுகம் | + 5,731 | + 4,555 | வி. கி. | வி. கி. |
| (ஆ) ஏனைய துறைமுகங்கள் | — 2,697 | — 1,960 | வி. கி. | வி. கி. |
| 5. தொழில் நிலை8 (எண்தொகை) | 9,013 | 8,364 | 8,294 | 8,113 |
| **துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனம்1** | 1971 | 1972 | 1973 | 1974 |
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம்2 (ரூ. '000) | 54,324 | 57,250 | 57,250 | 57,250 |
| (அ) கொழும்பு | 50,137 | 55,505 | 55,505 | 55,505 |
| (ஆ) காலி | 1,500 | 1,670 | 1,670 | 1,670 |
| (இ) திருகோணமலை | 2,687 | 75 | 75 | 75 |
